உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானுஹு வைகாசிமீ உசவ (1943 ஜூன்மீ 7 திங்கட்கிழமை) [இல. கள

## பரிதாபகரமான கார் விபத்து

யாழ்ப்பாணம் செங்.பட்ரிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை பார்த்த திரு. இராமுப்பிள்ளை இராசதுரை என்பவர் பரந்தனிலிருந்து தமது காரில் யாழ்ப்பாணம் திரும்பி வரும் வழியில இயக்கச்சிச் சந்தியில் ஒரு பரிதாபகரமான கார் விபத்துக்குள்ளாகி உடனே உயிர் நீத்தாரென்று அறிகின்றோம்.

திரு. இராசதுரை தமது மகனோடும் செங். பட்ரிக்ஸ் கல்லூரியிற் கற்பிக்கும் மற்றோர் ஆசிரியரோடும் பரந்தனிலுள்ள தமது கமத்தைப் பார்வையிட்ட பின் திரும்பி வந்தாரென்று தெரிகிறது. அவரது சகோதரராகிய திரு. இரத்தினமே காரைச் செலுத்திக் கொண்டு வந்தார். இயக்கச்சி என்னுமிடத்தில் கார் பாதையினின்று தவறிவிடவே திரு. இராசதுரையின் தலை காரின் மேற்பகுதியோடு மோதவே அவர் உயிர் நீத்தாரென்று தெரிகிறது. மற்றையோர் சில சிறு காயங்களோடு உயிர் தப்பினர்.

### பொலிஸ் மாற்றங்கள்

யாழ்ப்பாணம், யூன் 2

யாழ்ப்பாணத் தலைமைக்காரியாலயத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் பி. ஆர். டி. எஸ் செனிவரத்ன யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் கே. வி இராமநாதன் கொழும்புப் பொலிஸ் பயிற்சிப் பாடசாலைக்கு ஒரு போதனாசிரியராக மாற்றப்பட்டிருக்கிறார்.

### பண்டலேரியாமீது அமெரிக்க விமானங்கள்

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேசத் தலைமைக் காரியாலயம், யூன் 3

ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:-

பண்டலேரியாமீது அமெரிக்க விமானங்கள் பறந்துசென்று இராணுவ இலக்குகளைத் தாக்கின. கட்டிடங்களிலும் கப்பற் றளத்திலுங் குண்டுகள் விழுந்தன. துறைமுகப் பகுதியுந் தாக்கப்பட்டது.

இன்னுஞ் சில அமெரிக்க விமானங்கள் சார்டினியாவிலுள்ள பாதைகளையும் றேடியோ ஸ்தாபனத்தையும் வெடிகுண்டுகளால் தாக்கின. சத்துருவிமானங்களொன்றுந் தென்படவில்லை. எல்லா அமெரிக்க விமானங்களும் பத்திரமாகத் திரும்பின.

### சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலைப் புதுக்கட்டடப் பிரவேச விழா

நிகழும் சுபானுஹு வைகாசிமீ 24ந் திகதி (7-6-43) திங்கட்கிழமை பிற்பகல் 6 மணியளவில் ஷெவிழா ஆரம்பமாகுமென்றும், வடமாகாணத்தலைவர் திரு. எம். பிரசாத் அவர்கள் தலைமை வகிப்பார்கள் என்றும் ஷெ சபைக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## பிரிட்டன் மீது குண்டு வீச்சு

லண்டன் சனி

தென்கரைக்கூடாகச் சில ஜெர்மன் விமானங்கள் நுழைந்தனவென்றும், ஆயினும் ஒன்றுமாத்திரம் லண்டன் எல்லைக்குள்ளும் மற்றொன்று மாத்திரம் கிழக்கு மிட்லண்ட்ஸுக்குள்ளும் பிரவேசிக்கக் கூடியதாயிருந்த தென்றும் இன்று காலை பிரகடனஞ் செய்யப்பட்டது. சிலகுண்டுகள் வீசப்பட்டன, மிகச் சிறிய சேதமும் அற்ப உயிர்நஷ்டமும் ஏற்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

சென்ற இரவு செய்த விமானத் தாக்குதலில், ஒரு ஜெர்மன் விமானம் நாசமாக்கப்பட்டது.

### புதிய வைஸ்ராய் எத்தகையவராக இருக்கவேண்டும்?

இந்தியா விஷயமாக 'மான்செஸ்டர் கார்டியன்' இன்று எழுதியிருக்கும் தலையங்கமொன்றில் கூறுவதாவது:-

புதிய இந்திய வைஸ்ராய் சுதந்திர மனப்பான்மை கொண்டவராகவும் பரந்த நோக்கமுடையவராகவும் இருக்கவேண்டியது மிக அவசியமாகும். இந்தியர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையையே ஒரு முடிவாகக் கருதாமல் தம்மிடையே ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்ள இந்தியர்களைத் தூண்டக்கூடியவராக யிருக்கவேண்டும். யுத்தத்திற்குப் பிறகு சுதந்தர இந்தியாவின் நட்பை நாம் பெறுவதற்கு ஒரே வழி இப்பொழுதே அவர்களிடையே ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் காண இந்தியர்களுக்கு நாம் உதவியளிப்பதேயாகும்.

சிறையிலுள்ள காந்திஜியையும் அவரைச் சேர்ந்த மற்றத் தலைவர்களையும் காண மிதவாதத் தலைவர்களுக்கு அனுமதியளிப்பதே அரசியல் தீக்ஷண்யத்திற்கு முதற்படி. இந்தியாவின் வருங்காலத்தை இந்தியர்களே அமைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் விரும்புஞ் சமயத்தில் நாம் அவர்களுக்கு உதவி புரியவேண்டும். இக்கொள்கையில் நம்பிக்கைகொண்டு அதைக் கடைப்பிடிக்க எண்ணிக்கொண்டிருப்பவரைத் தவிர, மற்ற யாரும் வைஸ்ராயாகச் செல்லக்கூடாது.

### பிரஞ்சுக் கடற்கரையிற் கொங்கிறீற் அரண்கள்

லண்டன் ஜூன் 3—

டன்கேர்க்கிலும் ஒஸ்டெண்டிலும் ஏனைய பிரெஞ்சு பெல்ஜிய விடுமுறை ஸ்தலங்களிலும் கடற்கரையோரமாகவுள்ள ஹோட்டல்களும் விடுமுறை வாசஸ்தலங்களும் கொங்கிறீட் அரண்களாக மாற்றப்பட்டிருப்பதாகப் பெல்ஜிய செய்திஸ்தாபனத்துக்குக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. அந்த இடங்களிற் பொதுஜனங்களே இல்லை,

## இந்தியாவின் புதியவைஸ்ராய்?

மாஞ்செஸ்டர் சனி

இந்தியாவுக்கு வைஸ்ராயாவதற்கு லோர்ட் லின்லித்கோவின்பின் தகுதியுடையவரான முன்னர் பம்பாய்க் கவர்னராயிருந்த ஸேர். றோஜர் லம்லி என்பவரின் பெயர் குறிக்கப்பட்டிருப்பதாக "மாஞ்செஸ்டர் கார்டியனி"ன் லண்டன் நிருபர் எழுதுகிறார்.

இவரே லோர்ட் லின்லித்கோவிற்குப்பின் வைஸ்ராயாவாரெனச்சென்ற இளவேனிற்காலத்தில் இந்தியாவிற் சிலபகுதிகளிற் பேசப்பட்டது. ஆயின், அப்போது லோர்ட்லின்லித்கோவின் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்க நேர்ந்தது.

இனி, ஒரு புதிய வைஸ்ராயை நியமிக்கவேண்டியது மிஸ்றர். சர்ச்சிலினுடைய முதற் பொறுப்பாகும். அங்ஙனம் நியமிக்கப்படுபவர் அவ்வேலையை ஏற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தற்கு மூன்றுமாச அவகாசம் கொடுப்பதும் வழக்கமாகும். இம்மூன்றுமாசத்துக்கிடையில் புதிதாக வைஸ்ராயாக வாவிருப்பவர் பிரபுக்கள் சபையில் இல்லாவிடில் அவர் பிரபு ஆக்கப்பட்டுவிடுவார். அரசாங்கஅங்கத்தவர் ஒருவரே வைஸ்ராயாக்கப்படுவாரென்றும், அதனுல் மந்திரிபதவிகளிற் சில மாற்றங்கள் ஏற்படக்கூடுமென்றும் நம்பிக்கை நிலவுகிறது.

### குபான் போர்முனையில் ருஷியரின் வெற்றி

மொஸ்கோ ஜூன் 3

ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பவாவது:-

கிழக்குப் போர்முனையில் ஆகாய ஆதிக்கம் பெறுவதற்காக நடைபெறும் உக்கிரப்போராட்டம் ஒன்றில் ருஷியா இதுவரையில் உபயோகப்படுத்தியிராத மிகவும் பலம் வாய்ந்த விமானப்படை ஜெர்மன் விமானப்படையுடன் கொடியயுத்தம் புரிந்து வருகிறது.

குபான் அரங்கத்திற் கொடிய விமான யுத்தம் நடைபெறுகிறது. அங்கு ஜெர்மானியர் ஏறக்குறைய 1000 விமானங்களை உபயோகிக்கின்றனர். இங்கு ருஷியர் விமான ஆதிக்கத்தை ஸ்தாபித்துவிட்டனர். ஜெர்மானியர் விமான ஆதிக்கத்தைப் பெறுக்கொள்ளப் பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றனர். ஆயின், சோவியத்வீரர்கள் விமான ஆதிக்கத்தை விட்டுக்கொடுக்காமற் போராடி வருகின்றனர்.

குபான் பிராந்தியத்தின்மீது இரவுவேளையில் இருபக்க விமானங்களும் இரையுஞ்சத்தங் கேட்டவண்ணமாக இருக்கிறது. ருஷிய விமானப்படை ஸ்தாபனத்தை நடவடிக்கை எடுத்துக்கொள்ளாதபடி செய்யும் நோக்கத்தோடு ஜெர்மானியர் இரவுவேளையில் ருஷிய விமானத்துறைகளின்மீது தமது விமானங்களை உபயோகிக்கின்றனர்.

போர்முனையின் ஏனைய இடங்க

## இந்தியாவின் பேருதவி

வாஷிங்டன் ஜூன் 3

வடஆபிரிக்காவில் நேசதேசங்கள் ஈட்டிய வெற்றிக்கு இந்தியா செய்த உதவி அமெரிக்க யுத்தத் தகவற்பகுதி வெளியிட்ட ஓர் அறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "நேசதேசக்கட்சியிலுள்ள அங்கத்தவர்கள் தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஓர் அத்தாட்சி"யென்று இந்த உதவி வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டரைவருடகாலமாக நடைபெற்ற வடஆபிரிக்க யுத்தத்தில் இந்தியா ஏராளமான 'சப்ளை'களை அனுப்பியிருக்கிறதென்றும், முசோலினியின் ஆபிரிக்க ஏகாதிபத்தியத்தைக்காட்டிலும் ஜேர்மன் ஆபிரிக்கப்படைகளைச் சின்னபின்னமாக்குவதிலும் நான்காவது இந்தியடிவிஷன் அபாரமான உதவி செய்திருக்கிறதென்றும் அவ்வறிக்கையிற் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அவ்வறிக்கை மேலுங் கூறுவதாவது:-

15 லட்சம் தொன்னுக்கு அதிகமான 'சப்ளை'கள் இந்தியக் கப்பற் கூட்டங்களில் வட ஆபிரிக்காவுக்குச் சென்றிருக்கின்றன. அமெரிக்க 'சப்ளை'கள் வட ஆபிரிக்காவுக்கு வந்து சேரத் தொடங்கும்வரை இந்தியாவிலிருந்தே தளவாடங்கள் அனுப்பப்பட்டன.

வட ஆபிரிக்காவுக்கு இந்தியா 'சப்ளை'கள் அனுப்பியிராவிட்டால், ருஷியாவுக்கு நாம் அனுப்பிய 'சப்ளை'கள் குறைந்திருக்கும். இதுதான் இந்தியா செய்த உதவியில அதிக பிரதானமான அம்சமாகும்.

எட்டாவது சேனை வெற்றியீட்டிக் கொண்டு முன்னேறிச் சென்றபோது அதன் பின்னல இந்திய என்ஜினியர்படை புதுகரதப் பாதைகளை அமைத்துச் சென்றது. இந்தியத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களும் தளவாடங்களும் வட ஆபிரிக்காவில் இருந்த சேனைகளுக்குக் கொடுக்கப்பட்டன. எரீட்ரியாவில் சத்துருப் படைகளை ஆச்சரியகரமான முறையில் துவம்ஸம் செய்த பீரங்கிகள் இந்தியத் தொழிற்சாலைகளில் செய்யப்பட்டவைகளே யாகும்.

---

ளில ஜெர்மானியர் அவர்களின் வழக்கமான யுத்த தந்திரத்தைப் பின்பற்றிப் பலத்தைப் பரீட்சிப்பதற்கு அல்லது தாக்குதல் நடத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியில திடீரென்று ஒரு பெரும் விமானப்படையைத் திரட்டி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கூர்ஸ்க்மீது ஜெர்மானியர் பலமான தாக்குதல் நடத்தினர். இந்தளவு பருமனுள்ள எந்த ருஷிய நகரமும் இவ்வளவு மோசமாகத் தாக்கப்பட்டதில்லை. ஜெர்மானியர் 'ராட்டர்டாம்' வெற்றியை இங்கு ஈட்ட முடியாமற் போயிற்று. தாக்குதல் மிகவும்பலமாயிருந்தமையால் அதிக சேதம் சம்பவித்ததில் அதிசயமொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அராலி முத்துமாரிஅம்பாள் உற்சவாரம்பம்**

மழை காற்றுக் காரணமாகப் பின்போடப்பட்ட மேற்படி கோவில் உற்சவம் இம்மாசம் 27-ந் திகதி அதாவது வருகிற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

வ. சுப்பிரமணியம்,
(Proprietor & Manager)

Mis. 50. 7.6-43.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸ்ரீ
வைகாசிமீ உசஉ திங்கட்கிழமை

## புடைவை வியாபாரிகளும் கட்டுப்பாட்டதிகாரியும்

சென்ற வாரம் கண்டிநகரத்திலே மத்திய மாகாணத் தலைவர் மிஸ்ரர். E. T. டைஸன் தலைமை வகிக்கப் புடைவை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகிய மிஸ்றர். S. H. உவாடியா என்பவர் அங்கு வந்து கூடிய புடைவை வியாபாரிகள் கட்டுப்பாட்டிற்கு அமைந்து நடத்தற்குத் தவறினரென்றும் தம்மோடு அவர்கள் ஒத்துழைக்கவேண்டியதே முறையென்றும், பலர் அப்படி ஒத்துழைக்கத் தவறினரென்றும், அங்ஙனம் கட்டுப்பாட்டைமீறி நடப்பவர்கள் காலகதியில் தம் புடைவை வியாபாரத்தை அறவே விடவேண்டி நேரிடுமென்றும் கருத்துப்படக் கூறியுள்ளார். "உங்களுட் சிலர் முந்தி நீங்கள் வைத்துவிற்ற இலாபம் நூற்றுக்குப் பத்து விகிதமென்றும் கட்டுப்பாட்டின்பின் நூற்றுக்கு 25 விகிதம் இலாபம் உங்களுக்குக் கிடைக்கிறதென்றும் சொல்லுவதாக நான் அறிகிறேன்; ஆனல் நீங்கள் ஒரு விஷயத்தை நன்கு சிந்தித்திருக்கவேண்டும்; புடைவைக்கு விலைக்கட்டுப்பாடு வைத்தது. புடைவையின் விலையைக் குறைக்கிறதற்கன்றிக் கூட்டுவதற்கல்லவென்பதை நீங்கள் நன்கு உணர்ந்திருக்கவேண்டும்; இதற்குமாருக நீங்கள் செய்யத்தொடங்கினல், "சாரம்", வேஷ்டி, சேலையென்னுமிவைகளின் விலையை இன்னமுங் குறைத்து நாங்கள் விலைக்கட்டுப்பாடு செய்யமுடியும்; ஆனதால் யுத்தகாலத்திற்கு முந்தி நீங்கள் வைத்துவிற்ற இலாபத்தைக் காட்டிலும் குறைந்த இலாபம் வைத்து விற்பதற்கு எவ்வளவு விரைவாக நீங்கள் தொடங்குகிறீர்களோ அவ்வளவுக்கு நன்மையுண்டாகும். நீங்கள் முன்னரைக்காட்டிலும் இப்பொழுது இலாபம் அதிகமென்று சொல்வதனுல் உங்கள்சொல்லைச் சனங்கள் மெய்யெனநம்பி எங்களைக் குறை சொல்லுகிறார்கள். புடைவை வியாபாரத்திற்கு அனுமதி கொடுக்கும் விஷயத்தில் இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கையதிகாரிகளுக்கு மிடையில் எழுத்து விவகாரங்கள் இப்பொழுதும் நடைபெறுகின்றன. அதன்பின்பே சோரமான முறையில் அங்கிருந்து இங்கு புடைவைகளைத் தருவித்து விலைகூட்டிவிற்கும் விஷயம் சிந்திக்கப்படும்; புடைவைக்கு விலைகூட்டி விற்கும் வியாபாரிமார் சிலரின் நாமாவலியொன்று என்னிடத்தில் உண்டு; இக் கண்டிநகரத்திலே சில வியாபாரிமாரை இந்த விஷயமாக எச்சரித்திருக்கிறேன்; அவர்கள் தங்கள் வியாபார முறையைத் திருத்திக்கொள்ளாத பட்சத்தில் தங்கள் வியாபாரத் தொழிலையே முற்ருகவிட வேண்டி வரும்" என்று மிஸ்றர். உவாடியா கூறியுள்ளார்.

கட்டுப்பாட்டு விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு முந்திப் புடைவைகளை விற்றதாக வியாபாரிமார் கூறுவது உண்மையிற் சனங்கள்மீது இரக்கங்கொண்டல்ல; இந்தப் புடைவைவிலைக் கட்டுப்பாட்டை ஒழித்துவிட்டால் தாங்கள் நினைத்தபடி இலாபம் வைத்து விற்கலாமென்ற நோக்கம் பற்றியென்றே எண்ணக் கிடக்கின்றது. ஏன்? கட்டுப்பாட்டு விலைக்குக் கூடவிற்கவொண்ணுதென்பதேயல்லாமல், கட்டுப்பாட்டுவிலைக்குக்குறைய விற்கக்கூடாதென்ற நிபந்தனையில்லையாகும். இந்தச் சங்கடமான நேரத்திலே புடைவை வியாபாரிமார் புடைவையைத் தங்களுக்குரிய இலாபத்திற் சிறிது குறைத்துவிற்றுத் தங்கள் சகோதரர்களாகிய ஏழைச் சனங்கட்கு, மானத்தைக் காத்தற்காக உடுக்குந் துணிவிஷயத்தில் இயன்ற சகாயஞ் செய்யலாகும்.

## பண்ணைப் பாலம்

தீமையிலிருந்து நன்மை பிறத்தலுஞ் சில சமையங்களில் உண்டு; பண்ணைத்துறைக்கும் தீவுப்பற்றிற்கு மிடையே ஒரு பாலம் வேண்டுமென்ற முறையீடு பல காலமாகவுள்ளது; முன்னர்ப் பல சந்தர்ப்பங்களில் இந்த விஷயமாகத் தீவுப் பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு முறைப்பட்டும் இங்குள்ள சனத் தலைவர்கள் இதனைச் செய்வித்தற்குப் பல முயற்சிகள் செய்தும் கருமம் நிறைவேறவில்லை; சென்ற 1942 ம் ஆண்டில் பண்ணைக் கடலுள் நேர்ந்த உயிர்ச்சேதத்தை இப்பொழுது நினைத்தாலும் மனமும் தேகமும் நடுங்கும். ஆயினும், அந்த விபத்தின் பயனாக ஒரு நன்மையும் பிறந்திருக்கின்றது; பண்ணைப் பாலத்தை இயன்ற சீக்கிரத்தில் ஆக்கிவைக்க வேண்டுமென்ற ஊக்கம் அதிகாரிகளிடத்திற் பிறந்திருக்கின்றது; பண்ணைப்பாலம் தீவுப்பற்று மக்களுக்கு இன்றியமையாததென்பதும் யும் அதனுல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் அயலே கிடக்குந் தீவுகளெல்லாம் எல்லா வகையிலும் நன்மை யடையுமென்பதும் அத்தீவுப்பற்றிலுள்ளார்க்கும் இங்குள்ளார்க்கும் நன்கு புலப்படலாயின; பண்ணைக்கும் அல்லைப்பிட்டிக்கு மிடையே இப்போதைக்கு ஒரு பாலமிட வேண்டுமென்பதே இம் மாகாணத் தலைவருக்கும் போக்குவரத்துப் பகுதி மந்திரியாருக்கும் அபிப்பிராயமாகுமென அறியலானேம்; குறித்த பாலத்தை யிடுதற்கான முறைகள் செலவு என்னுமிவைகள் ஒருவாறு திட்டம் செய்யப்பட்டு இப்பொழுது போக்குவரவுப் பகுதி மந்திரியின் நிர்வாக சபையாரின் யோசனையில் இருக்கின்றனவாம்.

மேலும், குறித்த தோணிவிபத்தும் உயிர்ச் சேதமும் நேர்ந்த தினத்தின் அடுத்த ஆண்டுத் தினமாகிய சென்ற மேமீ 21-ம் தேதியன்று, அரசாங்க சபைப் பிரதிநிதியாகிய திரு. S நடேசனவர்களின் தலைமையில் ஒரு கூட்டங் கூடிய வரலாறும் அக்கூட்டத்திலே இப் பால விஷயமாகவும் தீவுப்பகுதி மக்களின் விருத்தி விஷயமாகவும்பேசப்பட்டவிஷயங்களும் முன் வெளிவந்துள்ளன; போக்குவரத்துப் பகுதி மந்திரியும் தீவுப்பற்றுவாசிகளின் வேண்டுகோட்கு இயைந்துள்ளனர். இப்படியான ஒருபாலம் விரைவில் அமைக்கப்படின் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு முதலிய எல்லாத் தீவுகளிலு முள்ள மக்கள் விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கல்வி யென்னும் விஷயங்களிற் பல்லாற்ருனும் பயனடைவர்; குறித்த தீவுகளுக்குப் போக்குவரத்துச் செய்தலும் சுலபமாகும்; மேலும், இந்தப் பெருங் கருமத்தை நிறைவேற்றி வைத்ததாகிய புண்ணியமும் புகழும் எங்கள் அதிகாரிகளையே சேரும். ஆனதால், போக்குவரவுப் பகுதி மந்திரியாரும் அவருடைய நிர்வாக சபையாரும், வடஇலங்கைக்கு இன்றியமையாததாகிய இந்தப் பால விஷயத்தில் இன்னமும் காலந் தாமதித்தலின்றி விரைவாக இதனை நிறைவேற்றி வைப்பாராக வென்ன இங்குள்ள மக்களனைவரும் எதிர் பார்த்திருக்கின்றனர்.

இலக்கியப் பகுதி:

# பாலைக் கலி

[ க. கி. ந. ]

I

கலித்தொகையின் முதற்கண் விளங்குவது பாலைக்கலி யாகும். துன்பத்தைச் சொல்லும் பகுதியை ஆங்கிலத்தில் Tragedy என்னும் வகுப்புக்குள் அமைப்பர். ஆங்கிலக் கவியாய், உலகெலாம் போற்றும் உத்தம நாடக கவியாய், செகசிற்பியார் என்று அழைத்தற்குச் சாலவுந் தகுதியுடையவராய் விளங்கிய 'ஷேக்ஸ்பியர்' என்னும் பெரும் புலவர் உலகப் பெருங்கவியாய் விளங்கியமைக்கு ஏது அவர் செய்த Tragedies எனப்படும் வீரம், வெகுளி, அவலம், அச்சம், இளிவரல் ஆகிய மெய்ப்பாடுகள் விரவி வரும் நாடகங்களை என்று கூறலாம். துன்பத்தைக் கேட்கும்போதே வாசகர்கள் மனம் லயிக்கின்றது; உணர்ச்சி வெள்ளம் பிரவாகிக்கின்றது. துன்பத்தைச்சொல்லும்போதே சிறந்த பாட்டு எழுகின்றது. கவியினுள்ளம் ஊற்றெடுத்தோடுகின்றது. மனிதசுபாவம் அப்படியே பிரதிபலிக்கின்றது. செந்தமிழ் நூல்களில் வரும் பாலைத்திணைச் செய்யுள்களும் இவ்வகுப்பைச் சேர்ந்தவையே. அவற்றில் இன்பமுந் துன்பமுங் கலந்துவரும். ஆதலால், பாலைத்திணை சிறந்ததென்பது கூருதே யமையும். குறிஞ்சித்திணையிற் பண்டைவிதி கடைகூட்டப் பிறர் அடுப்பவுங் கொடுப்பவுமின்றிக் கூடிய தலைவனுந் தலைவியும் பாலையிற் பிரிகின்றனர். பிரிவு துன்பம் பயப்பதொனருகும். அத் துன்பத்துள் இன்பமுங் கலந்து மிளிர்கின்றது. இத்தகைய சிறந்த பகுதியை முதற்கண் வைத்தமை தொகுத்தோரின் வைப்புமுறைச் சித்திரத்தைக் காட்டுகின்றது. புணர்ச்சி யின்றிப் பிரிவில்லை யன்ருே? ஆகவே, புணர்ச்சியும் புணர்ச்சி நிமித்தமுமென்றிவற்றை உரிப் பொருளாகக் கொண்ட குறிஞ்சியை முன் வைத்திருக்க வேண்டு மன்ருேவெனின், அற்றன்று சாதாரணமாக, ஒரு கதை சொல்லுமிடத்தும் ஒரூரில் ஒருவன் பிறந்தான் என்றும், அவன் வளர்ந்தான் என்றும், அவன் ஒருத்தியைக் காதலித்தானென்றும், அவர்தம் காதலுக்கு இடையூறு நேர்ந்ததென்றும், நேர்ந்தவழி, தலைவன் தலைவியராகிய இருவரும் பிரிவாற்ருது ஒருவரையொருவர் கட்டித் தழுவிய வண்ணமே கிணற்றுளோ ஆற்றுளோ வீழ்ந்து உயிர்நீத்தனரென்றும் என்றிவ்வாறு கூறுவதைக் காட்டிலும், ஓர் ஆற்றங்கரை. இரு பிரேதங்கள் ஒன்றையொன்று தழுவியபடி அலையாற் கரையிற் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று ஓர் அழகிய ஆடவனுடையது; மற்றையது ஓர் இளநறுங் கன்னியினுடையது. அவ்விருவருந் தாம் உயிர்நீத்தற்குக் காரணம் இன்னது என்று ஒரு கடிதத்தில் விபரமாக எழுதி அக்கடிதம் நனைந்து சிதைந்து போகாவண்ணம் அதனையோர் இரும்புப் பேழையில் வைத்து ஆடையில் முடிந்திருந்தனர் என்றும் கதை ஆரம்பிக்குமாயின், வாசகர்கள்மனம் உடனே அதில் லயித்து விடுகின்றது. உணர்ச்சி எழுகின்றது. துன்பத்தோடும் இரக்கத்தோடும் அவ்விருவரும் யாரோ? அவர்கள் வரலாறு எதுவோ? அவர்கள் காதல் எத்தகையதோ? அவர்களுக்கு நேர்ந்த இடுக்கண் யாதோ? அஃது எவ்வாறு ஏற்பட்டதோ? அதனை வெல்ல அவர்கள்எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவையோ? என்றின்னவற்றையெல்லாம் அறிய அவர்கள் மனம் அவாவித் துடிப்பதைக் காணலாம். இதனுலேயே நாடகாசிரியர்களோ கதை எழுதுபவரோ நவீனம் எழுதுபவரோ இத் தந்திரத்தை உபயோகிக்கின்றனர். ஆகவின், பிரிவையும் அதனுல் தலைவன் தலைவியர்க்கிடையே ஏற்படுந் துன்பத்தினையுங் கூறும் பாலைக்கலியை முதற்கண் வைத்தமை கலித்தொகையைத் தொகுத்தோரெனச் சொல்லப்படும் நல்லந்துவனரின் புலமைத் திறனைக் காட்டுகின்றது. நிற்க.

இக்கலி 35 இனிய செய்புள்களையுடையது. இதனைப் பாடியவர் பெருங்கடுங்கோ என்னும் சேரமன்னராவர். பாலைபாடிய சிறப்பினுல் இவர் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்றும் அழைக்கப்படுவர். இவர் கொடையிற் சிறந்தோர். வீரத்தில் மிக்கோர். புலமையிலும் சிறந்தோர். புலவர்களை ஓம்பிப் புரந்து வந்தோர். இவர் பாடிய செய்யுட்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய தொகை நூல்களுள்ளுங் காணப்படுகின்றன. இவர் அறந் தெரிந்தவர்; மரங்களைப் பற்றி நன்கறிந்தவர். விலங்குகளின் குணங்களும் தோற்றங்களும் பிறவுந் தெரிந்தவர். இசை நூலிலும் நல்ல அறிவுடையவர். ஓவியம் முதலியவற்றிலும் இவருக்கு வன்மை யுண்டு. சுருங்கக்கூறின், இவர் பல்கேள்வித் துறை போகிய நல்லாசிரியர். இவர் பாடிய செய்யுட்களைக் கொண்டு

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனும் மன்னுயிரும்

திரு. ஜெ. நாராயண சுந்தரமையங்கார், அவர்கள்

(முற்றொடர்)

இம்முறையானே, எவ்வுயிருங் காத்தலைத் தனது சிறப்புத்தொழிலாகக்கொண்டு, உலகனைத்திற்கும் ஒரு தனிக்கிழவனாய் விளங்குந் திருமாலாகவே திருவுடை மன்னர் குறித்து வழங்கப்படுவது கருதத்தக்கது. 'திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்,' (திருவாய்மொழி 4-4-8) என்று பெரியார் பணித்ததனானே இவர் இங்ஙனம் கருதப்படுதலை அறியலாம். அங்ஙனம் கருதப்படுதலானே, கையேறுசக்கரக் காவலன் செயல்களை வையகத்துற்ற இம்மன்னர்மேல் வைத்து வழங்குவதூஉம் மரபாயிற்று: "மாதுயிலுக்கு-ஆலைக்கவருங் குலோத்துங்க சோழன்' (குலோத்துங்கன் கோவை-150) என்பது போன்ற ஆன்றோர் வாக்குக்கள் பல இதற்குச் சான்று பகர்கின்றன. 'பெருமைபெற்ற கண்வளர்ச்சிக்கு ஆலிலையை விரும்பும் குலோத்துங்கன்' என்பது இக்கோவைச் செய்யுளடியின் பொருளாதலின், ஆலிலைத் துயிலலாகிய மாலின்றொழில் மாநில மன்னனாகிய குலோத்துங்கனுக்குரியதாகக் கூறப்பட்டவா றுணர்க. மற்றும், திருமாலுக்கும் திருவுடை மன்னர்க்குமுள்ள முடிமுதலிய சின்னங்களின் ஒற்றுமையும், அன்ன பிறவும் இண்டெண்ணத்தக்கன.

திருமால் காவற்றொழின்மேற் கொண்டு நின்றவன் என்பது பலர்க்கும் ஒப்ப முடிந்தது. பூமடந்தைக்கு ஒருதனிக்கிழவன் என்பதனை, ...............என்பதனானும், பூசூக்தம் போன்றவற்றானும், அவன், 'உண்டும் உமிழ்ந்தும்,.......' (திருவாய்மொழி 4-5-10) என்று ஆழ்வார் அருளிச்செய்தவாறு உலகையுண்டும், உமிழ்ந்தும், பிறசெயல்கள் செய்தும் அவ்வுலகு தன்னுடைமையாதல்காட்டி நிற்றலானும் பிறவற்றானும் உணரலாம். இவ்விறைவன், அவ்வுலகிடை நல்லோரைக் காத்து நல்லறத்தினை நிறுவுதல் மேற்கொண்டவன் என்பதனைக் கீதை முதலிய பெருநூல்களானும் பிற சான்றுகளானும் அறியலாம். 'அறத்தினூடின்றி நின்றவர்—வேரறுப்பென்' (கம்ப-ஆரணிய-அகத்திய-22) என்று மேற்கோள்கொண்டு நின்ற அவனது அவதார வரலாறுகளானும், இப்பெற்றியே, வையத்துற்ற மன்னர், நாடுகாவலைத்தாங்கி, அதன் நாயகராய் அமைந்து, அல்லோரையொறுத்து, நல்லோரைப்பேணி, அறத்தினையோம்பி நிற்றலின் அவர் கையேறு சக்கரக்காவலனது அம்சமாவரென்று கருதப்படுவாராயினரென்க.

இவ்வாற்றானே, ஒருநாட்டுக் குடிமக்கள் தம் முடிமன்னனைத் தம்மோடொத்தவொருவனாகக் கருதாது, தம்மைக் காக்கும் இறையென்று உயர்த்துப் போற்றுதல்பற்றி ஒருசிறிது உரைக்கப்பட்டது. இனி, முடிமன்னன் குடிமக்கள்பக்கற்கொள்ளுங் கருத்துப்பற்றிச் சற்றே ஆராய்வாம்.

மன்னவன், தன்னுயிர்போல மன்னுயிரனைத்தையும் காத்தல் வேண்டும் என்பது வழக்கு. அங்ஙனம் குடியோம்பலிற் சிறந்து நின்ற கொற்றவன், தன்னுயிர்போல மன்னுயிரைக்காக்குந் தண்ணளியானென்று யாவரானும் புகழ்ந்து போற்றப்படுவதூஉம் மரபு.

'வயிரவான் பூணணி மடங்கன்
மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயி ரொப்ப
வோம்பலால்
செயிரிலா வுலகினிற் சென்று
நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு
மாயினான்.'

(பால-அரசியல்-10)

என்ற கம்பராமாயணப் பாடலின்கண்ணே, தயரதச் சக்கரவர்த்தி இங்ஙனம் சிறப்பித்துரைக்கப்பெற்றிருத்தல் காண்க. 'மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன்றன்னுயிரென்னும் தகுதி' (மணிமேகலை-7-10) என்பதூஉம், மன்னன் மன்னுயிரைத் தன்னுயிரொப்பக் கோடல்வேண்டுமென்பதை வலியுறுத்துதற்குக் காட்டப்படும் மற்றொரு சான்றாகும்.

இங்ஙனம், 'கோனிகர்குடிகள் தம் கொள்ளை சான்ற'தென்று புகழப்படுமாறு தன்னாட்டினை யாவரும் ஒக்கப் போகமுநுகரும் பொன்னாடென்று போற்றற்குரித்தாக்கி, மன்னுயிரைத் தன்னுயிரோடொப்பப் பேணும் மன்னன்றன்மையும் அங்ஙனம் தம்மைக் காத்தல்செய்து நிற்பானை அம்மன்னுயிரெல்லாம் தம்மோடொப்பக் கருதாது தமக்கிறையென்று கருதும் மன்னுயிரியல்பும் ஒருங்கேயமைத்துத் 'தன்போலுலகம் புரக்கின்றவாணன் தமிழ்த் தஞ்சையார்மன்' (தஞ்சைவாணன் கோவை-295) என்று பொய்யாமொழிப்புலவர் புகன்றிருப்பது உற்றுநோக்கி யுணர்ந்து மகிழற்பாற்று. இவ்விருவ ரியல்புகளையும் இஃதுணர்த்துமாறு என்னையோ வெனிற் காண்பாம்.

இது, தஞ்சைவாணன்மீது பொய்யாமொழிப்புலவர் பாடிய கோவைநூலின்கண் உள்ளது. தஞ்சைவாணனென்பான் பாண்டிநாட்டில் தஞ்சாக்கூரில் வாழ்ந்து அதனைத் தலைமையாகக்கொண்ட மாறைநாட்டிற்குத் தலைமைதாங்கின்ற ஒருகுறுநிலமன்னனென்றும் தஞ்சாக்கூர் என்பது தஞ்சையெனமரீஇயிற்றென்றும், வாழ்நன் என்பது வாணனாயிற்றென்றும் அறிஞர் கூறுவர். 'உலகம் புரக்கின்ற வாணன்' என்றும், 'தஞ்சையார்மன்' என்றும் இங்குரைத்த செய்யுட்பகுதியின்கண் வருவதனானும் இவன் மன்னனாதல் உணரப்படும். இங்கு உலகமென்றது இக்கோவைத் தலைவனுக்குரியதாய்த் தஞ்சைநாடென்றும் மறைநாடென்றும் வழங்கப்படும் நாட்டினை* யென்க.

இதன்கண், 'உலகம்புரக்கின்ற வாணன்' என்றதனானே, தஞ்சைவாணன் தஞ்சைநாட்டுக்கு மன்னனாய்நின்று அதனைப் புரத்தல் புலனாயிற்று. ஆகவே, மீண்டும் 'தஞ்சையார்மன்' என்றது கூறியது கூறலும் வெற்றெனத் தொடுத்தலுமாய் வற்றும் எனின், 'தன்போலுலகம் புரக்கின்ற வாணன்' என்றதனானே தஞ்சைவாணன் அத்தஞ்சைநாட்டுமக்கள் பக்கற் கொள்ளுங் கருத்தும், 'தஞ்சையார்மன்' என்றதனானே அவர்கள் அவன்பாற் கொள்ளுங் கருத்தும் பெறவைத்தவாறுமாகலின் வற்றாதாயிற்றென்க. அஃதாமாறென்னையெனின், 'தன்போலுலகம் புரக்கின்றவாணன்' என்றதனால் தஞ்சைவாணன் தன்னாட்டு மன்னுயிரனைத்தையும் தன்னுயிரோடொப்பத் தன்கருத்தால் நோக்கிக் காக்குமாறும், 'தஞ்சையார்மன்' என்றதனால், அவனது நாட்டுமக்கள் அவனைத் தம்மோடொத்தவனாகக் கொள்ளாது, தம் இறையாகத் தங்கருத்தால்நோக்கிப் போற்றுமாறும் பெறப்படுவனவாமென்க. இவ்வாற்றானே, இப்பகுதியொன்றனுள்ளே, மேலுரைத்த மன்னனியல்பும், மன்னுயிரியல்பும் ஒருங்கே வந்தவாறு கண்டுமகிழலாம்.

இவ்வாறு உலகுகாவலன் 'உயிரெலாந் தன்னுயிரொப்ப' வோம்புகின்றான் என்று சிறப்பித்துரைக்கும் அடிப்பட்ட வழக்கையொட்டிக் கம்பரும் கூறியிருத்தல் முன்னர்க் காட்டப்பட்டது. இஃதொருபுறமிருக்க, நம் கவிச்சக்கரவர்த்தி இராமன்பக்கல் இன்னும் ஒருபடி மேற்செல்கின்றார். அதனைச் சிறிது ஆராய்வாம்.

பன்னெடுங்காலம் மகப்பேறின்மையால் வையகம் மறுகுறுமாலோ வென்பதோர் மறுக்கமுற்றிருந்த தயரதமன்னன், பின்னர் 'முன்னையூழ்வினைப் பயத்தினும் முற்றிய வேள்வி பின்னையெய்திய நலத்தினும் அரிதினிற்பெற்ற' இராமபிரானுக்கு அரசைநல்குவானெண்ணி, வசிட்டமுனிவனும் சுமந்திரனும் உள்ளிட்ட மந்திரத்திருந்து தன் கருத்தை விரித்துரைத்தவுடன், அம்முனிவன் இராமற்கு அது தகுமென்பான் அப்பெருமானது ஏற்றமெல்லாம் எடுத்துக்கூறுமிடையில், அவன் குடிமக்கள் பக்கற் கொண்டுள்ள அன்பின்றிறத்தை விளக்குவானாகி, 'இராமன் - தன்னுயிர்க்கென்கை புல்லிது தற்பயந்தெடுத்த உன்னுயிர்க்கென நல்லன் மன்னுயிர்க்கெலாம் உரவோய்' (கம்ப-அயோத்தியா—மந்திர-38) என்று அரசனைநோக்கி உரைசெய்ததாக நம் கவிச்சக்கரவர்த்தி கூறியுள்ளார். இது, மன்னன் மன்னுயிரைத் தன்னுயிர்போல மதித்தலைக் கிழிடைநிறுத்தி மேனிலைநிற்றல் வெள்ளிடைமலை.

இராமன் தன்னுயிருக்கு எத்துணைநல்லனோ அத்துணை நல்லன் மன்னுயிர்க்கும் எனின், அஃது அவனது உயரியல்பைக் குறைத்துக் குற்றதகையேற்றியதாகுமென்று கவிஞர்பெருமான் கருதுகின்றார். அவன் தன்னுயிரிடத்துப் பெரிய [illegible]கொண்டவனென்பது அவனது இறைமைக் குணத்திற்குச் சிறவாதென்பது அப்புலவர் திலகத்தின் கருத்து. இராமபிரான், தன்னலங்கருதாது தனக்குரிய அரசும் போகமும் துறந்து கணையும் வில்லும் தாங்கிக் கானகத்தே அலைந்து, 'யான் வனம்போந்தது என்னுடைப்புண்ணியத்தால்' (கம்ப-ஆரணிய-அகத்திய-18) என்று தான் அவ்வாறு வனம்புக்கதனைப் பாராட்டிப் பிறர்க்குரிய நலத்தைப் பேணிகின்ற பெருவள்ளலன்றோ! இங்ஙனமாய இவனது இவ்வியல்பு குறித்தெழுதப்புகின் அது மிகவும் விரிவதொன்றாமன்றோ? ஆகவே, தன்னுயிரினும் சிறக்க மன்னுயிரை அவன் மதிக்கின்றானென்று சாற்றுதலே தக்கதாமென்பதூஉம், அங்ஙனம் மன்னன் மன்னுயிரை மதித்தலே மன்னற்குரிய மாட்சிகளுள் மிக்கதாமென்பதூஉம் அக் கவிதாசிரோமணியின் அபிப்பிராயமாகின்றன. இதனாலேயே, 'தன்னுயிர்க்கென்கைபுல்லிது' என்றாராயிற்று. இதன்கட் 'புல்லிது' என்றது, அங்ஙனம் மன்னுயிரைத் தன்னுயிரோடொப்பக் கொள்ளுதலாகக் கூறுங் கூற்று எட்டுணையேனும் இம்மன்னற்கு ஏற்புடைத்தாகாத இழிநிலையுடைத்தாதல்காட்டி, அதனை வெளியுரைக்குமியல்தோன்ற நின்றது.

இங்ஙனம் இராமன் தன்னுயிர்க்கென மன்னுயிர்க்கு நல்லனென்பதனைப் புல்லிதென விலக்கிய ஆசிரியர், 'தற்பயந்தெடுத்த உன்னுயிர்க்கென நல்லன் மன்னுயிர்க்கெலாம் உரவோய்' என்ற பகுதியானே, அவனது அன்பின் நிலையினை விளக்கிச் செல்கின்றார். இதனானே, இராமன், தன்னினும் தன்னைப்பெற்றவனையே சிறக்க நேசித்தானென்பதூஉம், அத்தந்தைபக்கல் எத்துணையன்புகொண்டுநின்றானோ அத்துணையன்பு மன்னுயிரிடத்துங் கொண்டு நின்றானென்பதூஉம், இவ்வாறு அவன் பெற்றோனிடத்துவைத்த பேரன்பும் பிறவுயிரிடத்துவைத்த பேரன்பும் ஒன்றையொன்றொக்குமேயொழியப் பிற அவற்றையொவ்வாவென்பதூஉம் பெறரும் பெறவே, அவன் மன்னுயிரிடத்துக் கொண்ட அன்பினளவு அறியப்படுவதாகின்றது. இதனானே, அவன் மன்னுயிரைத் தன் தாதையோடொப்பக் கருதினான் என்றவாறாயிற்று.

—(வரும்)

*'வாணன் றமிழ்த்தஞ்சைநாட்டிடன் றனியுயிர்க்கோ ரரண்மானனைய கண்ணாள்' (தஞ்சை. 19) எனவும், 'மாலன்ன வாணன்றென் மாறைநன்னாட்டு வயலுகளும்-சேலன்ன நீள்விழியாய்' (தஞ்சை 309) எனவும் வருவனவற்றால் இவ் வி[illegible] காணலாம்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யோகதரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

(முற்றொடர்)

சிலர் தம்மனத்திற்கு ஓர் உருவத்தையும் கொடார். அப்போது மனம் எதனைப்பற்றும். உருவமில்லாத தம் உயிரை அல்லது கடவுளை உள்ளுவர். மனம் அலைவின்றி உயிரை அல்லது கடவுளை நாடும். அவையே அம்மனத்திற்குப் பற்றுக்கோடு. யானை தேங்காயைப் பற்றியபோது அசைவின்றி நிற்றல் போலவும், குரங்கு வாழைப்பழத்தைப் பற்றி அசைவின்றியிருத்தல் போலவும், மனம் உருவமுள்ள கடவுளையோ, உருவமில்லாத உயிர் கடவுளையோ பற்றி அலைவின்றி நிற்கும்.

இவ்வாறு மனம் அலைவின்றி நிற்றலே, மனஒழுக்கம், சித்தநிரோதம் என்பர் பதஞ்சலி முனிவர். இதனைப்பயில யாவர்க்கும் முடியும். மனம் ஒடுங்குங்கால் என்ன நிகழுகின்றது. மூச்சும் ஒடுங்குகின்றது.

நம் மூக்கின் இரு துவாரங்களாலும் காற்று உள்ளே செல்லுதலும் வெளியே வருதலும் நீங்கள் யாவரும் அறிந்தவையல்லவா? சிலநேரம் இடது துவாரத்தால் மூச்சு வெளியே வருகின்றது சிலநேரம் வலது துவாரத்தால் வருகின்றது. சிலநேரம் இரண்டு துவாரங்களாலும் வருகின்றது. இடது துளையாலும் வலது துளையாலும் மூச்சு மாறி மாறி ஓடுகின்றபோது இடாநாடி பிங்கலநாடி தொழில் செய்கின்றன. இரண்டு துளையாலும் மூச்சு ஓடுகின்றபோது சுழுமுனாநாடியும் தொழில் செய்கின்றது.

சுழுமுனாநாடி இயங்குகின்றதைக் காண்கின்ற யோகியர் தாம் என்ன வேலையில் அமர்ந்திருந்தாலும் விட்டுவிட்டு ஓடிப்போய்த் தியான இடத்தில் இருந்து யோகஞ்செய்வர். சுழுமுனாநாடி யாது? நம் முதுகெலும்பின் நடுவே ஒருமெல்லிய நூல்போன்ற துளை உண்டு. அந்தத் துளைவழியே பிராணன் என்னும் காற்று இயங்குகின்றது. இது இடாநாடி பிங்கலநாடிகளில் இயங்கும் பிராணன்களுடன் கலக்கும்பொழுது மூக்கின் இருதுளைகளாலும் மூச்சுச்செல்லும் என்பது யோகியர் கூற்று.

மனமானது தனது பற்றுக்கோட்டில் ஒருமுகப்படப்பட மூச்சும் ஒடுங்குகின்றது. மனம் ஒடுங்க மூச்சும் ஒடுங்கும். மூச்சு ஒடுங்க மனமும் ஒடுங்கும். மனமும் மூச்சும் பரஸ்பரம் ஒற்றுமையுடையன. மூச்சைப் பிராணயாமப் பயிற்சியினாலும் ஒடுக்கலாம். பிராணயாமத்தினால் ஒடுக்குதல் கடினமுறை. உதாரணமாக இரமண மகரிஷி ஒன்று சொல்வர். முன்செல்ல மறுக்கின்ற மாட்டை அடித்து ஓட்டுதல்போலாம் பிராணயாமம். புல்லை ஏந்தி முன்சென்றால் மாடுதானே பின்வரும். அதுபோலாம் மனத்தை ஒடுக்க மூச்சு ஒடுங்கும் முறை.

இனி மனமும் மூச்சும் ஒடுங்கும்போது யாது நிகழுகின்றது? நம் மலவாயிலின் மேலே மூலாதாரசக்கரம் என்று ஒன்றுள்ளது. அதில் 72000 நாடிகள், நரம்புகள், உள்ளனவாம். அதில் குண்டலினி என்னும் தெய்வீகப் பாம்பு சுருண்டு கிடக்கின்றது. இது ஒரு பெரும் ஆற்றல், சக்தி. யோக ஆசனங்களாலும் மற்றும் முறைகளாலும் இது இரைந்து கொண்டும் சீறிக்கொண்டும் சுருளை நிமிர்த்தி சுழுமுனாநாடி வழியே செல்லும். செல்லும் வழியில் அது தங்குமிடங்களுண்டு. இறுதியில் ஆயிரம் தாமரையிதழ் வடிவுள்ள சகஸ்ரார சக்கரத்தில் உறையும். இச்சக்கரம் தலையின் முடியில் உள்ளது. இக்குண்டலினியின் செலவை எளிதாக்குவதற்கே யோகியர் சிரசாசனத்தில் நின்று யோகஞ்செய்வர்.

குண்டலினி எழுந்து முதுகெலும்பின்வழியே செல்லும்போது பல சித்திகளைக் கொடுக்கும். இச்சித்திகளை அட்டமாசித்தியென்பர். இறந்தகால, நிகழ்கால, வருங்கால நிகழ்ச்சிகளையறியும் ஆற்றல், பிறரின் நினைவுகளை அறியுமாற்றல், பிறர் காணாவண்ணம் தான் மறைந்து செல்லுமாற்றல், மிக்கவலிமை மூடப்பட்டவிடங்களில் உள்ளனவற்றைக் காணுமாற்றல், விண்மீன்களின இயல்பையறியுமாற்றல் முதலியன தாமே வரும். இவ்வாற்றல்களை உலக போகங்களுக்கு உபயோகப்படுத்தப்படாதென்பது யோகியர் விதி.

குண்டலினி சக்தி மனம் ஒருமுகப்படுதலினால் எழும்பும், மூச்சு ஒடுங்குதலினால் எழும்பும். குண்டலினி சக்தியில் மனதைச் செலுத்தினால், அஃதாவது அதனை நினைத்தால் எழும்பும். யோகியர் முன் தூயஎண்ணத்துடனிருந்தால் எழும்பும். யோகியர் தம் விரலால மாணவனின கொப்பூழ் முதலிய இடங்களில தொட்டு மேலே இழுத்துக் குண்டலினியை எழுப்புவர். இராமகிருஷ்ணர் அவ்வாறு சில மாணவருக்கு எழுப்பியுள்ளார் என நூல்கள் கூறும். குண்டலினி சக்தியே பல சித்திகளுக்கு ஆதாரமாம் என இதனால் அறியலாம்.

சித்திகளைச் சிந்தியாது மேன்மேல் ஞானவழியில் செல்லுபவர்கள் சமாதி வகைகளை அறிவார். சமாதிகளால் உயிர்வேறு, சடப்பொருளாலாகிய உடல்வேறு, கடவுள் வேறுஎன உணர்வர்.

சடப்பொருள் என்பது பிழம்பு. (matter) இது பிரகிருதியினின்று எழுந்தது. பிரகிருதியினின்று உண்டாயவை 24 தத்துவங்கள், உண்மைகள் என்று சாங்கிய தரிசனத்தைப்பற்றிப் பேசியபோது சொன்னேன். 25 வது உண்மை உயிர். 25 தத்துவங்களே சாங்கியத்துக்கு உள. யோகம் கடவுளையும் ஒன்றாகச் சேர்த்து 26 தத்துவங்கள் கூறும். ஆன்மா பல. வேதாந்தத்துக்குப்போல ஆன்மா ஒன்றல்ல.

கடவுள் என்பது யாது? அது ஓர் உயிர். நன்மை தீமைகளாலும் அவற்றின் பயனாலும் பாதிக்கப்படாத உயிர். அறியாமை முதலிய துன்பங்கள் அந்த உயிரைச் சார்தலில்லை. அந்த உயிரின் முற்றறிவுடைமை முழு ஆற்றலுடைமைக்கு ஈடு இல்லை. அப்படிப்பட்ட உயிரே கடவுள். அவரே பிரமா, விட்டுணு, உருத்திரன் இவர்களுக்கு ஞானக்குரு. அவரே வேதங்களின்மூலம் யாவர்க்கும் ஞானக்கண் கொடுக்கின்றவர். அவருடைய பெயர் ஓம் என்னும் பிரணவம். அப்பிரணவத்தைத் தியானம்பண்ண மேலான சமாதிகிடைக்கும். இச்சமாதியில் உயிர் தான் பிழம்பின் வேறு என்று உணர்ந்து பிரிந்து நிற்கும். உயிர் பிழம்பினின்று விடுபட்டு நிற்றலே முத்தி.

இனி யோகத்திற்கு எண்வகை உறுப்புக்கள் கூறுவர். அவையாவன இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

இயமம் நியமம் என்னும் இரண்டும் ஒழுக்கமுறை. கொல்லாமை, கள்ளாமை, வாய்மை, பிரமசரியம் முதலியன இயமம். உடல் தூய்மை, பொறுமை, தவம், ஞானக்கல்வி, கடவுளுக்கு எல்லாவற்றையும் ஈதல் நியமம். ஆசனம் இருக்கைமுறை. பிராணயாமம் மூச்சுமுறை. பிரத்தியாகாரம் பொறிகளைப் புலன்வழி போகாமல் அடக்குதல். இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம் யாவரும் பயிலவேண்டியவையன்று. முற்பிறவியில் யோகம் பயின்றோர் இப்பிறவியில் இவற்றை முறையே பயிலாமல் யோகநிலையில் அமர்வர்.

## காகத்திற்கு இரண்டுகண்களிருந்தும் ஒரு கண்ணாலே பார்வையைப் பார்த்தற்கு நியாயமும் பிறவும்

(பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை)

சித்திரகூடத் திருப்பச் சிறுகாக்கை
மூலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய வனைத்
துலகுந் திரிந்தோடி
வித்தகனே யிராமாவோ நின்னபய
மென்றழைப்ப
அத்திரமே யதன்கண்ணை யறுத்ததுமோ
ரடையாளம்.

எனப் பெரியாழ்வார் திருமொழியாலும்,

காகத் திருகண்ணிற் கொன்றே
மணிகலந் தாங்கிருவர்
ஆகத் தோருயிர் கண்டனம்
யாமின்றி யாவையுமா
மேகத்தொருவ னிருவரும் பொழி
லம்பலவன் மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்
வருமின்பத் துன்பங்களே.

எனத் திருக்கோவையாரிலுங் கூறிய பிரமாணங்களால் ஸ்ரீ இராமஸ்வாமியும், சீதா தேவியும் வனவாச காலத்திலே சித்திரகூட மலைச்சாரலில் ஏகாந்தமாக இருக்கும்போது தேவேந்திரனுடைய மகன் சயந்தன் காக வடிவங்கொண்டு தாயென்றறியாமல் தேவியின் வடிவழகைக் கண்டு விபரீத எண்ணங் கொண்டு அத்தேவியின் உடம்பிலே புண்படுத்த அதனையறிந்த ஸ்ரீ இராமபிரான் அதிகோபங் கொண்டு ஒரு தருப்பைப்புல்லை யெடுத்து அதில் பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அந்தக் காகம் அதற்குத் தப்பித்துக்கொள்ள வழிதேடியும் தன்னைப் பாதுகாக்க ஒருவரும் இல்லாமையால் மீண்டும் ஸ்ரீ இராமபிரானையே சரண்புக, பெருமான் அக் காகத்திற்கு உயிர்ப்பிச்சை கொடுத்து அந்த அஸ்திரம் வீணாகாமல் காகத்தின் ஒருகண்ணை அறுத்தஅளவோடு விட்டனர் என்பதாம். இராமாயணத்திலும் "காகமொன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்; வேக வெம்படை விட்டது" என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வித காக்கையானது தந்திரமுடையதும், தருணத் துக்குத் தக்க புத்தியுடையதும், சில தருணங்களில் அறிவீனமுடையதும், ஏனைய பிராணிகளைப்போல் தன் பெடையுடன் புணராமல் மனுஷ சஞ்சாரமில்லாத இடத்தில் புணர்ச்சிசெய்யும் குணமுடையதாகும். பெரும்பாலும் இப்பட்சி மலைச்சாரலில்புணர்ந்து இன்பமடையும்.

அங்குதய நன்மையாம் விருந்துபொருள்
நஷ்டமா மழுகையாம் மடந்தை
வருவள்
அதிவருணந் தீமூட்டல் முகில்பொழித
லுதிரஞ்சாமாகுமிது காகசாஸ்திரந்
தங்கிடமிருந்து வலமாகவே சென்றிடிற்
சர்வகா ரியமுமாகும்
தரையினிற் புற்றிலு மகனேல் பான்மரத்
திலுந் தான்கூவன் மிகநன்றும்
தொங்கியிடு பலாக் கௌவி மூக்கினாகக்
கல் சோறிரைகள் கௌவி வருதல்
தொடர்வழியின் முன்னோடல்வாய்மெல்
லல் நன்றதாந் தொல்லுலகில் யாவ
ருக்கும்
சங்கையாஞ் சங்குநதி பெருகுவள
நாடெனுங் கற்பகவிராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேச
னே கயிலையங் கிரிவாசனே.

எவர்களாயிருந்தாலும் ஒருகருமத்தை யுத்தேசித்துப் போகும்போது காக்கையானது இடதுபக்கத்திலிருந்து வலது பக்கத்திற்குப் போகுமாயின் எல்லாக் கருமங்களும் அனுகூலமாகும். தலையில், புற்றின்மீது, மரத்திலிருந்து கூவுதல் மிக உத்தமம். பழம் கௌவியிருத்தல், மூக்கை அலகினைத் தடைத்தல் சோறு முதலிய இவைகளை வாயிற் கவ்விக் கொண்டு வருதல், தாம் போகும் வழியில் முன்னோடல், வாய் மெல்லுதல் முதலியவற்றைச் செய்யின் மிகவும் நன்மையுண்டாம்.

காகம் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாய்ப் போகுதல் உத்தம சகுனமென்பர். வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாய்ப் போனால் துற்சகுனமென்பர். இதற்குப் பிரமாணம்,

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி
யார்க்கவமே
வந்ததொரு பெண்பழியென்
வாழ்த்துகே னந்தோ
வரயிடு முன்னவர்க் கருத்தவா
கெட்டேன்
கொடியிடமாய்ப் போந்த
குறை.

எனவரும் மதுரைக் கலம்பகச் செய்யுளாலும் நன்கு அறியக்கிடக்கின்றது.

விவாகஞ் செய்வதற்குமுன் சுபவாரதிதி நட்சத்திரங் கூடிய சுபவேளையில் பூர்வான்னத்தில் காகத்திற்குப் பலியிட்டுச் சகுனம் பார்க்க வேண்டுமெனக் காலங்கண்ட ஆன்றோர் கூறுவர்.

இதற்கு ஆயுள் வரையறை இல்லை. மூதேவிக்குக் கொடியாகவும், சனீஸ்வரனுக்கு வாகனமாகவும் பொருந்தியுளது.


தேயிலை — மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலை

யாழ்ப்பாணம் கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்டாரிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்,
150, ஆஸ்பத்திரித்தெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்,
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலைக்கு ஏஜெண்டுகள்.

Mis. 45. 3-6—28-6-43.



சிறுபிள்ளை வைத்தியத்திலும்



ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம் காய்ச்சல்முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரியபெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம்வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம்ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரே சீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம்பெற்ற சில்லாலை முத்துவைத்தியர்

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்,

(Q. 30. 11-5.43—10-8.43)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடஇலங்கை அச்சுநிலைய அதிபர்களின் சங்கம்

வடஇலங்கை அச்சுநிலைய அதிபர்களின் சங்கம் ஒன்று நிகழும் 1943ம் ஆண்டு மேமீ 29ம் திகதி சனிக்கிழமையன்று ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் செல். ஜோசெப் கத்தோலிக்க அச்சியந்திரசாலை மனேஜர் ரெவரண்ட் சியர்க்கா O. M. I. அவர்கள் தலைமையில் நடைபெறலாயிற்று. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி ஆதியாம் இடங்களிலுள்ள அச்சுக்கூட அதிபர்களிற் பெரும்பாலோர் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர்; கூட்டத்துக்கு வரமுடியாத அச்சுநிலையக்காரர் தம் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தனர்.

தலைவர் தமது முன்னுரையில் இத்தகைய ஒரு சங்கத்தின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டி அச்சுக்கூட அதிபர்களாயுள்ளோர் இத்தகைய ஒரு சங்கத்தைக் கூட்டிக் கொழும்பிலுள்ள அகில இலங்கை அச்சுநிலைய அதிபர்களின் சங்கத்தோடு இச்சங்கத்தை ஒருங்கியாகச் சேர்த்து அச்சுநிலையங்களின் முன்னேற்றங்கருதி உழைக்கத் தலைப்பட்டுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கதென்றும், இச்சங்கத்திற் சேர்ந்துள்ள அங்கத்தவர்களனைவரும் மிக்க ஒற்றுமையோடு கருமமாற்றி அச்சுநிலையங்களின் நலன்களைப் பேணுவார்கள் என்று தாம் நம்பியிருப்பதாகவும் கூறினர்.

அதன்பின், உத்தியோகஸ்தர் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் அச்சியந்திரசாலை மனேஜர் திரு. I. P. துரைரத்தினமவர்களை அகில இலங்கை அச்சுநிலைய அதிபர்களின் சங்கக்கூட்டத்தில் வடஇலங்கை அச்சுநிலைய அதிபர்களின் சங்கப் பிரதிநிதியாக இருந்து காகிதக்கட்டுப்பாட்டு அதிகாரியோடு சில பிரதானமான விஷயங்களை விவாதிப்பதற்காக அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கத்திற் சேரும் அங்கத்தவர்களின் கட்டணப்பணம் இவ்வளவு என்பதுபற்றியுந் தீர்மானிக்கப்பட்டது.

ஈற்றில், அன்று அக்கூட்டத்திற்குத் தமது வசதியீனங்களையுஞ் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் வந்து தலைமைவகித்த ரெவரன்ட் பிதா சியர்க்கா O. M. I. அவர்களுக்கும் சமுகமளித்துச் சிறப்பித்த ஏனையோர்க்கும் சங்கத்தின் இணைக்காரியதரிசிகளுள் ஒருவராகிய திரு. க. கி. நடராஜன் அவர்கள் (கமலாசனி அச்சுநிலைய அதிபர்) நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித

## "மகாத்மா காந்தி சர்வாதிகாரியல்ல"

டக்டர். சுப்பராயனின் அறிக்கை

மகாத்மாகாந்தி ஒரு சர்வாதிகாரியல்ல. அவர் ஒருவரே பாகிஸ்தான் ஏற்படுவதற்கு இணங்கிவிடமுடியுமா? ஜின்னா சாஹிபுக்கு லீகர்கள் புத்திசொல்லி அவரைச் சரிப்படுத்த வேண்டுமென்கிறார் டக்டர். பி. சுப்பராயன்.

சென்னை மே, 29—

டக்டர். பி. சுப்பராயன் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

காந்திஜீயின் கடிதத்தை அரசாங்கந் தடுத்தது சரி என்று ஜின்னா சாஹிப் கூறுவது அதிசயமாகவே இருக்கிறது. பாகிஸ்தானை ஏற்றுக் கொள்வதாகவும் அதனோடு காங்கிரஸின் ஆகஸ்ட்தீர்மானத்தை வாபஸ் வாங்குவதாகவும் மகாத்மா கடிதம் எழுதியிருக்க வேண்டுமாம். ஜின்னா சாஹிப் இவ்விதங் கூறிப் பதுங்குகிறார். இது நியாயமே இல்லை.

### சர்வாதிகாரியா?

காந்திஜீ ஒரு சர்வாதிகாரியல்ல. சர்வாதிகாரியாக இருந்தாற்றானே காந்திஜீ தாம் ஒருவரே முடிவுகட்டிப் பாகிஸ்தான் கோரிக்கைக்கு இணங்கிவிடக்கூடும். காந்திஜீ ஜின்னாவைச் சந்திக்கவே விருப்பந்தெரிவித்தார். சந்தித்து ஜின்னாவுடன் விஷயத்தை விவாதிக்கவும் மகாத்மா விரும்பினர்.

இதற்காகக் கடிதமும் எழுதினர். வேறு ஒன்றுமில்லை. இம்மாதிரிக் கடிதங் குறித்து ஜின்னா சாஹிப் எல்லைமீறிப்பேச ஆரம்பித்துவிட்டார். தாம் விடுதலையாகும் பொருட்டுக் காந்திஜீ பிருத்தானிய அரசாங்கத்தையும் முஸ்லிம்லீக்கையும் விரோதப்படுத்த முயலுகிறாராம். மகாத்மாவின் உத்தேசம் இதுதானா? அல்லது ஜின்னா சாஹிப் தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பகீரதப் பிரயத்தனஞ் செய்கிறாரா என்பதைத் தேசமக்கள் நன்கு அறிந்துகொள்ளக் கூடும். லீக் மகாநாட்டில் ஜின்னா வீறுப்புடன் பேசியதற்கு அரசாங்கம் இணங்காமற்போகவே இவ்விதம் அவர் குட்டிக்கரணம் போடுகிறார்.

### லீகர்கள் பொறுப்பு

இவ்வித நிலைமையில் முஸ்லிம் லீகர்கள் பொறுப்பு மகத்தானதாகும். லீகர்களுக்கு இந்தியாவின் சுதந்தரத்திலும் முஸ்லிம்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்பதிலும் உண்மையில் அக்கறை இருக்குமானல், அவர்கள் தங்கள் தலைவரைச் சரிப்படுத்தவேண்டும்.

## பாலைக் கலி

2ம் பக்கத் தொடர்ச்சி

இஃதுணரப்படும். நல்லிசைப் புலமை வாய்ந்த செந்தமிழ் மன்னர்களுள் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ சிறப்பு வாய்ந்த ஒருவர் என்ற அளவில் மனத்திற் பதித்துக் கொண்டு அவர் பாடிய செய்யுட்களுள் நுழைவோமாக.

முதலாஞ் செய்யுள், இல்லாமையினது இளிவுகூறி இல்வாழ்க்கையை நடாத்துவதற்குப் பொருள் வயிற் பிரிவே னென்ற தலைமகனுக்கு, தலைமகளது இயல்பு கூறி, இத்தகையவளைப் பிரியாமையே பொருளாவது எனச் சொல்லிச் செலவழுங் குவித்தமையை, தோழி தலைமகளுக்கு வந்து சொல்லியமையைத் துறையாக வுடையது. இஃது எவ்வாறு இச் செய்யுளின் கண் சொல்லப்படுகின்றது என்று பார்ப்போம். முதற்கண் தலைவன் பிரிந்து செல்ல நினைந்த பாலை நிலத்தின் கொடுமை கூறப்படுகின்றது.

இறைவன் உலகுகளைப் படைக்கக் கருதிய விடத்து, அப்படைத் தற்றொழிலைச் செய்தற்கு உரியனாய்த் தோன்றிய முதியவனாகிய அயன் முதலாகிய தேவர் தமக்குத் துன்பம் இழைத்த அவுணரை அழிக்க வேண்டு மென்று சிவபிரானை இரந்தனரல்லவா? அங்ஙனம் இரந்தகாலை மாயஞ்செய் அவுணருடைய வலியைக் கெடுத்தற்குச் சினத்து அவ்வவுணரை, வஞ்சியாது எதிர் நின்று அடுகின்ற வலியுடனே, முக்கண்ணனாகிய இறைவன் மூன்றெயிலையுங் கோபிக்க, அவன் முகம் தெறுமாறு போல, ஒள்ளிய ஞாயிறு சுடுகையினலே வரை பிளந்து, பிறராற் சீறுதற்கரிய மழுவை யுடையோன் சினக் கையினலே அந்த முப்புரம் அழித் தலைப் பெற்று உதிர்வன போல, போவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக் கிடந்த வெம்மை விளங்குந் தொலையாத வழியையுடையது அப் பாலைநிலம். இதில், ஞாயிறு சுடுகையினலே வரை பிளந்தமையும், பிளந்த அவ்வரைகள் போவார்க்கு வழி யில்லையாக உதிர்ந்து குறுக்கிட்டுக் கிடந்தமையும் முறையே முக்கண்ணன் முகந் தெற மூன்றெயிலுந் தகர்த்தமைக்கும், அம் மழுவுடையோன் சினக் கையினலே அந்த முப்புரம் அழித் தலைப் பெற்று உதிர்தற்கும் உவமிக்கப்பட்ட சிறப்பு நோக்கத் தக்கது. சிவனர் திருச் செயலும் பழைய வரலாற்றை மறவா தோம்பலும் கையாளப்பட்ட முறை சிந்திக்கத் தக்கது. காட்டின் வெப்பங் கூறிய சித்திரம் என்ன அழகிது! இனி, இத்தகைய காட்டில் நின்னை மறத்தலரிதாகிய வேட்கையை யுடைய தலைவி இவ்விடத்தே இறந்துபடும் படியாகப் பொருள் வயிற் பிரியத் துணிந்தவரே! என்று தலைவனை விளிக்கின்றாள் தோழி. விளிக்கும் போதே உருக்கம் விளைக்கத் தக்கதாக விளித்த தோழி,

"முன்பு உண்டான பொருள்களெல்லாங் கொடுத்துத் தொலைந்தது. இனிக் கொடுக்கப் பொருளில்லை. வந்து இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இளிவாகும் என்றிவ்வாறு கருதியே மலையைக் கடந்து போய்ப் பொருளீட்ட நீர்கருதினீர் என்பதை நாமறிவோம். (அப்பொருளும் நன்கு மதிக்கத் தக்கதே. ஆயினும்) நீ பிரியின், நிலைபெற்ற கற்பினை யுடையவள் உயிர் வாழாள். இனி, அவளுடைய முலையாகம் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ?" என்று நயம்பட வினவுகின்றாள். அடுத்த இரு தாழிசைகளையும் நோக்குக. இவ்வாறு கூறி, மேல் தலைவன் மனத்தில் ஊன்றித் தைக்கத்தக்க வார்த்தை யொன்றைக் கூறுகின்றாள். "என்றிவ்வா றெல்லாம் யான் கூறும்படியாக இவள் பொலிவழிவினைத் தன்னிடத்தே கொண்டு வருந்தவும், நீ பொருள் தேடப் பிரிகின்றது உனக்கு அன்பு அல்ல" என்கின்றாள். இச்சொல் அவன் மனத்தை ஊடுருவிச் செல்கின்றது. அவனுற் சகிக்க முடியவில்லை. உடனே, போதலை நிறுத்தி விடுகின்றான். அவனே எதற்கும் அஞ்சா வீரம் படைத்தவன். எதுவும் அவனைத் தடுக்க முடியாது. எனினும், அன்பிற்கு அடங்கினன். இதனை ஆசிரியர் பெருங் கடுங்கோ ஓர் அழகிய உவமை மூகத்தான் விளக்குகின்றார். அவன் அச்சொற்கு அஞ்சியமை பரிக்கோலாற் குத்தவுந் தன்னெறியில் நில்லாத கடும் விசையை யுடைய ஓர் ஆண்யானை மெல்லிய யாழோசையின் எல்லையிலே தங்கினதை ஒத்திருந்தது என்கின்றார் ஆசிரியர். ஆகவே, அதுபோலத் தலைவன் அன்புற்றுத் தாழ்ந்து குற்றேவல் மகளாகிய எனது கூற்றின் எல்லையிலே தங்கிப் போகா தொழிந்தார்காண் என்னுங் கருத்தமைய வரும்

"புன்கண் கொண்(டு) இனையவும்
பொருள்வயி னகறல
அன்பன்(று) என்றியான் கூற
வன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற்
றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத்
தாழ்புநின்
றொல்கவின் தொலைத லஞ்சியென்
சொல்வரைத்தங்கினர்காதலோரே"

என்னும் அடிகள் எத்துணை இன்பம் பயப்பன என்று பாருங்கள்!

## ஹிற்லருக்குப் பிரமாண்டமான நஷ்டம்

மொஸ்கோ ஜுன் 12—

ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

சென்ற மார்ச் மாதத்திலிருந்தே ருஷிய அரங்கத்தில் அமைதி நிலவி வந்தகாலத்தில் ஹிற்லர் மூன்று அல்லது நான்குபிரிவு சிறந்த படைகளை இழந்திருக்கிறார்.

டொனெட்ஸ் அரங்கத்திலுள்ள விகிசான்ஸ்க் பகுதியிற் சென்ற மே மாதம் முதல்வாரத்திலிருந்து 7000 ஜெர்மானியர் இறந்திருக்கக் கணக்கெடுக்கப்பட்டனர். காயமடைந்தவர்களின் தொகையும் இந்த அளவுக்கு இருக்கலாம்.

ஸ்மோலென்ஸ்கிற்கு அருகிலுள்ள இடங்களிற சென்ற மார்ச் மாத இறுதியிலிருந்து 5600 ஜெர்மானியர் கொல்லப்பட்டிருப்பதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மானியருக் கேற்பட்ட சேதம் முழுவதையுங் கணக்கிடுவது அசாத்தியம். டொனெட்ஸ் பாலமுனையில் இருபக்கத்தாரும் கைகலக்காத நாளே கிடையாது. சென்ற சில வாரங்களில் நிலவியிருந்த அமைதியின்போது ருஷியர் தங்களுடைய தளங்களை நன்கு பலப்படுத்தியிருக்கின்றனர்.

குபானிலிருக்கும் ஜெர்மானியர் அனைவரையும் நவரோஸிஸ்கிற்கு அப்பால் துரத்தியடிப்பதற்கு ஏதுவாகப் பிரமாண்டமான ஒரு வலுத் தாக்குதலை நடத்தக்கூடிய அளவுக்கு நிலம் இன்னுங் காயவில்லை. இந்த அரங்கத்திலிருக்கும் சக்தி ருஷியருக்குப் பிரதிகூலமாகவும் ஜெர்மானியருக்கு அநுகூலமாகவும் இருக்கிறது.

## விவாகம்

### சோமசுந்தரம்—இராஜலக்ஷுமி.

நிகழும் சுபானுஹு வைகாசிமீ 31-ந் திகதி (14.6.43) திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் வரும் கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில் நல்லூர் திரு. S. சரவணமுத்து (Retired Apothecary) அவர்களின் புதல்வன் திருவளர் செல்வன்: **சோமசுந்தரத்துக்கும்** (Apothecary) மண்டைதீவு திரு. S. கணபதிப்பிள்ளையவர்களின் புதல்வியும் அவ்வூர்க் கிராமச்சங்கத்தலைவர் திரு. க. கைலாசபிள்ளையவர்களின் சகோதரியுமாகிய திருவளர் செல்வி: **இராஜலக்ஷுமிக்கும்** மணமகளில்லத்தில் விவாகம் நடைபெறும்.

அவ்வமையம் நண்பர்களும் சுற்றத்தவர்களும் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

(Mis. 51. 7-6.43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலீஸ் படையில் பலருக்குப் பதவி உயர்வு

### புதிய உப இன்ஸ்பெக்டர் ஜெனறல் ஒருவர் நியமனம்

இலங்கைப் பொலீஸ் படையைத் திருத்தியமைக்கும் திட்டத்தின்படி உப-இன்ஸ்பெக்டர் ஜெனறல், 12 உதவிச் சுப்பிறிண்டெண்டுகள், 14 பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர். ஜி. எச். ஆர். ஹாலண்ட் நியமித்திருக்கிறார்.

மேல்மாகாணத்தைச் சேர்ந்த பொலீஸ் சுப்பிறிண்டெண்ட் மிஸ்டர். ஜி. கே. பிப்பெட் தற்காலிக உப - இன்ஸ்பெக்டர் ஜெனரலாகக் கடமையாற்றுவார்.

மிஸ்டர். எல். என். பீரிஸ் மிஸ்டர். எம். இஸ்மாயில் மிஸ்டர். ஐ. டி. மெரி மிஸ்டர். ஜி. எச் ராபின்ஸ் மிஸ்டர். ஓ. எஸ். டி. சில்வா மிஸ்டர். ஜி. ஏ. கேருெக்லூட் ஆகிய உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டெண்டுகள் தற்காலிக சுப்பிறிண்டெண்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மற்றும் பல இன்ஸ்பெக்டர்கள் உதவிப்பொலிஸ் சுப்பிறிண்டெண்டுகளாகவும் வேறு பலர் பிரதம இன்ஸ்பெக்டர்களாகவும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்,

## தேவை

யாழ்ப்பாணம் பெண்கள் கைத்தொழிற்பாடசாலைக்கு ஓர் அநுபவம்மிகுந்த மேற்ரறன் (Matron மேற்பார்வைக்காரி) தேவை. இருக்க அறையும் சாப்பாடும் தகுதிக்கேற்ற சம்பளமும் பள்ளிக்கூடத்தில் உண்டு. விரும்புவோர் 30.6-43 திகதிக்குமுன் நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பப் பத்திரம் அனுப்பவும்.

(Mrs.) R. பொன்னம்பலம்,
காரியதரிசி.

Mis. 48. 7, 14, 21, 28-6-43

## நேசதேச தினக் கொண்டாட்டம்

### ஜூன் மாதம் 14-ந் தேதி நடைபெறும்

கடந்த வருடம் கொண்டாடப்பட்டது போன்ற 'நேச தேசத் தினம்' ஜூன் மாதம் 14 ந் தேதி கொழும்பில் நடைபெறும். அப்பொழுது இலங்கையின் தரைப்படை, விமானப்படை, கடற்படை முதலியவற்றைச் சேர்ந்த வீரர் அணிவகுத்துப் பவனி செல்லுவர். அமெரிக்க வீரரும் நெதர்லந்து வீரரும் பிரிட்டிஷ் இந்திய இலங்கை வீரரும் கலந்து கொள்ளும் இவ்விழாவின்போது பொதுஜனங்கள் சிறந்த காட்சிகளைக் கண்டு மனமகிழ்ச்சி யடைவர்.

விமானத் தாக்குதல் பாதுகாப்புப் படையினர் தீயணைக்கும் படையினர், சாரணச் சிறுவர் முதலியோரும் இச் சிறந்த வைபவத்திற் பங்குபற்றிக் கொள்ளுவர்.

### ராணி மாளிகை வழியாகப் பவனி செலவுதல்

ஜூன் மாசம் 14-ந் தேதி காலை எக்கிலன் ராணுவ வாசஸ்தலத்திற்குவெளியே அணிவகுப்பு வைபவம் நடைபெறும். படையினர் அணிவகுத்துச் சென்று ராணிமாளிகைக்கெதிரே மரியாதை செலுத்துவர். ராணிமாளிகைக் கெதிரே சகல நேச தேசங்களின் கொடிகளும் பறக்க விடப்படும்.

அதே தினத்தில் லண்டனிலும் வாஷிங்டனிலும் அணிவகுப்பு ஒத்திகை நடைபெறும். கடந்த வருடமும் இத்தினம் அதி விமரிசையாக அமெரிக்காவில் கொண்டாடப்பட்டது. இவ்விஷயத்தில் தலைவர் ரூஸ்வெல்ட் அதிக சிரத்தை யெடுத்துள்ளார்.

## காகித விநியோகம்

### அரசாங்க டிப்போக்கள் ஏற்படும்

"நம் தேவைகள் முழுவதையும் பூர்த்திசெய்யப் போதுமான காகிதம் இல்லை'' என்று உதவிக் காகிதக் கட்டுப்பாட்டு அதிகாரி மிஸ்டர். டப்ளியூ. பிரான்சிஸ் ஜோன்ஸ் சென்ற புதன்கிழமை நடைபெற்ற அகில இலங்கை அச்சுத்தொழில் நடத்துபவர்களின் சங்கக் கூட்டத்திற் பேசும்போது கூறினார். அக்கூட்டத்திற்கு அரசாங்கசபை அங்கத்தினர் மிஸ்டர் பி. டி. எஸ். குலரத்ன தலைமை வகித்தார்.

மிஸ்டர். ஜோன்ஸ் மேலும் கூறியதாவது:—

கல்யாண அழைப்பு மரண அறிவித்தற் பத்திரம் போன்றவை அச்சடிப்பது அவ்வளவு பிரதானமல்ல. ஒரு கல்யாண அழைப்பிதழ் அச்சடிக்கப்படுவதைவிட வியாபாரியின் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அச்சடிக்கப்படவேண்டியது மிக்க அவசியமாகும்.

"கண்டி, காலி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அரசாங்கக் காகித ஸ்டோர்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரியான ஸ்டோரொன்று கண்டியில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஸ்டோர்கள் அப்பகுதியிலுள்ள சில்லறை வியாபாரிகள் அச்சடிப்பவர்கள் ஆகியவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்.''

கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மிஸ்டர். ஜோன்ஸ் கூறியதாவது:—

பெரிய கம்பெனிகளுக்கும் சிறு கம்பெனிகளுக்குமிடையே ஏதாவது வித்தியாசம் காட்டப்படுமேயானல், அது சிறுகம்பெனிகளுக்குச் சாதகமாகத்தான் இருக்கும். பெரிய கம்பெனிகளிடமிருந்து கடுதாசிக் கையிருப்பை எடுத்து எல்லோருக்குஞ் சமமாகக் கட்டுப்பாட்டதிகாரி பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்.

ஓர் அச்சடிப்பவரிடம் போதிய காகிதம் இருக்குமேயானல், அவர் அச்சடிக்கக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து அநுமதிபெறவேண்டியதில்லை. ஆயின், அவர் ஒரு விஷயத்தை அச்சடிக்குமுன், அது அத்தியாவசியமானதாவென்று யோசித்துச் செய்யவேண்டும்.''

அச்சடிக்கப்படும் விஷயத்தில் அச்சடிக்கும் ஸ்தாபனத்தின் பெயர் போடவேண்டிய தவசியமாவென்று கேட்கப்பட்டபொழுது அப்படிப் பெயர் போடவேண்டியது அவசியமென்று மிஸ்டர். ஜோன்ஸ் பதிலளித்தார்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 15340ம் இலக்க வழக்கில் நீதிபதியுடைய கட்டளைப்படி, தொல்புரம் மானமுதலியார் மடதர்மத்தை நடாத்துவதற்கு தர்மகர்த்தாக்களைத் தெரிவதற்காக, 23-5-43ல் வாக்குரிமை யாட்களின் பேர் முதலியன தயாரித்த அட்டவணையின்படி, மேற் சொல்லிய தர்மகர்த்தாக்களின் தெரிவு, 1943ம் ஆண்டு ஆனிமாதம் 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம், தொல்புரம் மான முதலியார் மடத்தில் நடத்தப்படும். மேற்குறித்த நேரத்திலும், இடத்திலும் வாக்குரிமைபாளர் யாபேரும் சமுகமாயிருந்து தகுதியுடையோரைத் தெரிவு செய்யுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

க. அரியகுட்டி,
கொம்மிஷனர்,
(Retired Maniagar)

சங்கானை,
5.6-43.

(Mis. 49. 7 & 10.6.43)

## பொருளாதார உதவிப் பேராசிரியர் நியமனம்

### பாட்ணக் கல்லூரியைச் சேர்ந்த மிஸ்டர். எஸ். டட்

பாட்ண கல்லூரியின் பொருளாதாரப் போதனசிரியரான மிஸ்டர். எஸ். டட் இலங்கைச் சர்வகலாசாலையின் பொருளாதார உதவிப்பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1943-ம் ஆண்டு பாட்ண சர்வகலாசாலையின் பி. ஏ. பட்டம்பெற்ற மிஸ்டர். டட் பொருளாதாரப்பகுதியில் முதல வகுப்பில் தேறினர். பின்னர் இவர் லண்டன் பொருளாதாரப் பாடசாலையிற் சேர்ந்து 1938ம் ஆண்டு பொருளாதாரப் பகுதியில் பி. எஸ். ஸி பட்டம்பெற்றார். அப்பொழுதும் இவர் முதல் வகுப்பில் வெற்றிபெற்றதுண்டு. மிஸ்டர் டட் 1940ம் ஆண்டுமுதல் பாட்ணக் கல்லூரியிற் பதவிவகித்து வருகிறார்.

## தேகவியோகம்

மூகாந்திரம் க. முத்துக்குமாரு அவர்கள் காரைநகரில் சைவஒழுக்கமும் சிவநெறிப் பற்றுமுடைய திருவாளர். சபாபதி கந்தையா அவர்களுக்குச் சிரேஷ்ட புத்திரனகஉதித்தவர்; அரசினர் கச்சேரியில் (பிஸ்கால் கந்தோரில்) சீவ் கிளாக்காக இருந்து கடமையாற்றி ஒய்வுபெற்று உபகாரவேதனம் பெற்றவர்; காரைநகர் கிராமச் சங்கத்தின் முதற்தலைவராக இருந்து கடமையாற்றியவர்; காரைநகர்ச் சைவ மகாசபையின் தலைவராக இருந்து அதற்கு ஒரு நிலம்வாங்கவும் சிறந்த கட்டிடமமைக்கவும் பெருமுயற்சி செய்து தொண்டாற்றியவர்; கட்டிடத்தின் ஒரு பகுதியைத் தமது ஞாபகசின்னமாக அமைத்தவர்; காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையின் முகாமையைவற்று அதனைத்திறம்பட நடத்திக் கொண்டிருந்தவர்; ஆயிலி ஐக்கிய சங்கத்தின் தலைவராகவிருந்து ஐக்கியத்தை வளர்த்தவர்; குருநாகலில் ஓவசியராகவிருக்கும் திரு. மு. சபாபதிப்பிள்ளைக்கும், கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோரில் கடமையாற்றும் திரு. மு. வைத்தியலிங்கத்துக்கும் திரு. மு. இரத்தினசிங்கத்துக்கும், திரு. மு. அம்பலவாணருக்கும் அரிய தந்தையாகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொன். நவரத்தினசிங்கம் M. A அவர்களுக்குப் பெரிய தந்தையாகவும் உள்ளவர். பலராலும் கொண்டாடப்படும் அரிய பெரிய நற்குணங்கள் அமைந்தவர்; இவரது பெருந்தகைமையை நோக்கி இலங்கை அரசினர் இன்னவருக்கு "மூகாந்திரம்'' என்னும் கௌரவப் பட்டத்தினைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளார்கள்.

இவர் தமது 77-வது வயதில் சில நாளாக நோய்வாய்ப்பட்டிருந்து நிகழும் சுபானு வரு வைகாசி மீ 6-ந் தேதி (20-5:43) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் தமது இருகத்தில் தேகவியோகமெய்தினர். அவரது அந்திய கர்மங்களாகிய சூர்ணோற்சவம் அந்தியேஷ்டி என்னுங் கிரியைகள் அடுத்தநாள் வெள்ளிக்கிழமை மக்கள் நால்வராலும் முறைப்படி நடத்தப்பட்டன. இப்பெருந் தகையாரின் ஆத்மா சாந்தியுறுவதாக.

—நடிதி

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் யூன் 8

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 துதிப் பாடல்கள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் ஆர் துப்புசாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எஸ் எம் ராமசாமி ஐயங்கார் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 எஸ் எம் ராமசாமி ஐயங்கார் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 எஸ் ஆர் துப்புசாமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செயதிகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மாதர் இசை† 8 மதராஸில் உள்ளபடி (டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல்) 9-15 ஜய்ஜய் வந்தி 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பதவர்ணங்கள் 10 இசை வேளை 10-30 முடிவு.

### புதன் யூன் 9

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 பழனி விஜயலக்ஷ்மி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஆர் நாகபூஷணம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் நாகபூஷணம்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 கம்ஸன் இசைநாடகம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில்செய்திகள் 7-45 டாக்கி இசை† 8 கோஷ்டி கானம் 8-45 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இரு வயலின்கள் 10 மதராஸில் உள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் யூன் 10

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8படப்பாட்டுகள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன்பாட்டு 9முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே வி ஜயராமய்யர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 கே வி ஜயராமய்யர்வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45வாத்யகோஷ்டி 8 பாலக்காடு ராம பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஓரின ராகங்கள் 10 ஐரோப்பிய சங்கீதம்† 10-30 முடிவு


## தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க்கொம்பனி)

**கொளுக்கி ஓடுகள்** எங்களிடம் விலைக்கு இருக்கின்றன

"புரொப்ரைட்டர்"—K. A. இரத்தினசிங்கம்,
பெரியகடை, யாழ்ப்பாணம்,

Y 19. 4-3-42——3-3-43


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponnai, Jaffna, on Monday 7, June 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org